**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சீர்காழி.**
**அசல் வழக்கு எண். 135/2020**

2025–ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 06–ம் நாள் திங்கட்கிழமை சாட்சியின் வாக்குமூலம், 2023–ஆம் ஆண்டு பாரதிய சாஷ்சிய அதிநியம் பிரிவுகளின் விதிமுறைகளின்படி திரு. மா.சந்திரமோகன்.,பி.ஏ., பி.எல்., மாவட்ட உரிமையியல் நீதிபதி, சீர்காழி, அவர்களால் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு பிரமாணம் செய்விக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| தேதி: | 06.10.2025 | | |
| பெயர்: | அய்யாசாமி (PW- 1 Cross ) | தகப்பனார் பெயர்: | தங்கசாமி |
| கிராமம்: | கீழ செங்கமேடு | தாலுக்கா: | சீர்காழி |
| தொழில்: | விவசாயம் | வயது : | 51/2025 |

**பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை : 06.10.2025**

**(ஆரம்பித்த நேரம்–12.32)**

1. தாவாவானது எதற்காக தொடரப்பட்டுள்ளது என்றால் தாவா சொத்தில் பிரதிவாதிகள் நுழையக்கூடாது என்பதற்காக. தாவா சொத்தின் சர்வே எண் என்பது 556/7B. தாவா சொத்தின் மொத்த விஸ்தீரணம் 147 ச.மீ. தாவா சொத்து என்பது பரம்பரை சொத்தா என்றால் இல்லை, எனது தகப்பனாரால் கிரயம் வாங்கப்பட்டது. அந்த கிரயம் எந்த வருடம் வாங்கப்பட்டது என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது.

2. எனக்கு செட்டில்மெண்ட் எழுதிக்கொடுத்தது எனது தகப்பனார் பெயரில் உள்ள பட்டாவின் அடிப்படையில். எனது தகப்பனாருக்கு கொடுக்கப்பட்ட பட்டா எவ்வாறு கொடுக்கப்பட்டது என்றால் சுமார் 50 வருடங்களுக்கு மேலாக அந்த இடத்தில் குடியிருந்து வந்ததின் அடிப்படையில் பட்டா கொடுக்கப்பட்டது. அந்த பட்டாவின் விஸ்தீரணம் என்பது 224 ச.மீ ஆகும். பட்டா சொத்தை எனக்கும் எனது சகோதரிக்கும் எனது தகப்பனார் செட்டில்மெண்ட் எழுதி வைத்தார்.

3. தாவா சொத்திற்கு வடக்கு, தெற்கு மற்றும் மேற்கில் பக்கிரிசாமி நிலம் உள்ளது, கிழக்கில் நாராயணசாமி இடம் உள்ளது. நாராயணசாமி தாயார் பெயர் சமுத்திரம் என்றால் சரிதான். மேற்படி சமுத்திரம் இந்த நீதிமன்றத்தில் கலியன், தங்கவேல் என்பவர்களின் மீது வழக்கு தொடர்ந்த விபரம் தெரியுமா என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. பிரதிவாதிகள் எனக்கு எழுதிக்கொடுக்கப்பட்ட இடத்திற்கு எந்தப் பக்கத்தில் குடியிருந்து வருகிறார்கள் என்றால் கிழக்கில் இருக்கிறார்கள்.

4. எனது தகப்பனார் எனது சகோதரி அன்பழகிக்கு 2007ல் செட்டில்மெண்ட் எழுதி கொடுத்தார். அதன் விஸ்தீரணம் 82 சதுரடி இருக்கும். எனக்கு எழுதிக்கொடுத்தது 147 ச.மீ இருக்கும். எனக்கு தாவா சொத்து செட்டில்மெண்ட் எழுதிக்கொடுத்த போது பட்டா தாக்கல் செய்யப்பட்டதா என்றால் உள்ளது. வா.சா.ஆ.1 செட்டில்மெண்ட் ஆவணத்தில் இணைக்கப்பட்டுள்ள தூய சிட்டா என்பது கிராம நிர்வாக அலுவலரால் கையொப்பம் செய்யப்பட்ட மண்டல துணை வட்டாட்சியரால் மேலொப்பம் செய்யப்பட்டது என்றால் சரிதான்.

5. வா.சா.ஆ.1 ல் உள்ள சொத்து விபரத்தில் மரம், தழை வகையறா இருப்பதாக குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். ஆனால் வழக்குரையில் சொத்து விபரத்தில் மரம், தழை, வகையறாக்கள் இருப்பதாக நான் பொய்யாக குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரியல்ல. நான் நீதிமன்றத்தை ஏமாற்றி தீர்ப்பை பெற வேண்டும் என்ற எண்ணத்துடன் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

பிரதிவாதிகள் தரப்பு வழக்கறிஞர் வேண்டுக்கோளுக்கு இணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்தி வைக்கப்படுகிறது.

**(முடிவு நேரம்– 12.53)**